# பத்திரிக்கைச் செய்தி

## புதிதாக மின்சார கம்பத்தை நிறுவ ரூ.4,000/- லஞ்சம் கேட்டு பெற்ற போர்மேன் கைது

புகார்தாரர் திரு.அருணாச்சலம், பாண்டியபுரம், சங்கரன்கோவில் தாலுகா, தென்காசி மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தான் புதிதாக கட்டிய வீட்டிற்கு மின்சார இணைப்பு வேண்டி சேர்ந்தபுரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.ரத்தினம், போர்மேன், சேர்ந்தமரம், வேடாலம்பட்டி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புதிதாக மின்சார கம்பம் நிறுவ தனக்கு லஞ்சமாக ரூ.4,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்காசி பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 10.10.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ரத்தினம், போர்மேன், புகார்தாரரிடமிருந்து லஞ்ச முன்பணமான ரூ.4,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.